

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து : துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்களுக்கு ஆதரவு: துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்கள் முழு திருச்சபையின் செபத்தினாலும், பொருள் உதவியினாலும் ஆதரவு பெற வேண்டுமென்று**

**மார்ச் மாத கரு : தேவையறிந்து பகிர்வதில் வாழ்வது**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| மார்ச் 19 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 6.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>திருப்பலி (த) | தவக்கால 3-ஆம் ஞாயிறு<br>தவக்கால 3-ஆம் ஞாயிறு - முதலாம் சடங்கு<br>அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம், ஜெலாப்பாங் |
| மார்ச் 20 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித சூசையப்பர் |
| மார்ச் 21 செவ் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | தவக்கால வாரநாள் |
| மார்ச் 24 வெள் | மாலை 7.30 | சிலுவைப்பாதை (த, ஆ)/ திருப்பலி (த) | தவக்கால வாரநாள் |
| மார்ச் 25 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு |
| மார்ச் 26 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>காலை 11.00<br>மாலை 5.30 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ)<br>திருப்பலி (ம)<br>நவநாள்/ திருப்பலி (த) | தவக்கால 4-ஆம் ஞாயிறு<br>தவக்கால 4-ஆம் ஞாயிறு - இரண்டாம் சடங்கு<br>தவக்கால 4-ஆம் ஞாயிறு<br>கிறிஸ்து அரசர் சிற்றாலயம், புந்தோங் தீகா |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| மார்ச் 19 ஞா | மாலை 7.30 | ஜெலாப்பாங் | அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய குழு கூட்டம் |
| மார்ச் 20 திங் | மாலை 7.30<br>மாலை 8.00<br>மாலை 8.00 | பெர். மை 2-1 & 2-2<br>பெர். மை 1-2<br>பெர். மை 1-3 | RCIA<br>ஆன்மீகக்குழு கூட்டம்<br>பெற்றோர்கள் ஆதரவுக் குழு கூட்டம் |
| மார்ச் 21 செவ் | காலை 8.30<br>மாலை 7.45<br>மாலை 8.00<br>மாலை 8.00 | பெர். மை 1-3<br>பெர். மை 1-3<br>முனிசிபல்<br>பெர். மை 1-1 | பங்கு பரிந்துரை செபம்<br>நற்கருணை பணியாளர்கள் கூட்டம்<br>அருங்கொடை (த)<br>தியான வகுப்பு |
| மார்ச் 22 புதன் | மாலை 8.00<br>மாலை 8.00<br>மாலை 8.00 | ஆலயம்<br>பெர். மை 1-1<br>ஜெலாப்பாங் | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த)<br>அருங்கொடை (த)<br>அருங்கொடை (த) |
| மார்ச் 23 வியா | மாலை 7.00<br>மாலை 7.30<br>மாலை 8.00<br>மாலை 8.30 | ஆலயம்<br>பெர். மை 2-2<br>பெர். மை 1-3<br>பெர். மை 1-2 | முன்னோன் வாசகர் பயிற்சி<br>RCIA<br>புலூமா மகளிர் குழு கூட்டம்<br>உபசரிப்பு குழு கூட்டம்- வருகை கட்டாயம் |
| மார்ச் 25 சனி | காலை 10.00<br>மாலை 5.30 | பெர். மை 2-5<br>ஆலயம் | சீடத்துவ நிகழ்வு<br>செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| மார்ச் 26 ஞா | மாலை 7.30 | புந்தோங் தீகா | கிறிஸ்து அரசர் சிற்றாலய குழு கூட்டம்- மேற்கு திசை தலைவர்கள் |
| 19 & 26 மார்ச் 2017 மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது. மீண்டும் 2 ஏப்ரல் 2017 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும். | | | |

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. ஆயரின் உத்தரவு: 1)** ஒவ்வொரு விசுவாச பயிற்சியாளர்கள் (மறைக்கல்வி ஆசிரியர்கள், RCIA ஏற்பாட்டாளர்கள், திருமுழுக்கு/ திருமண விளக்கவுரையாளர்) ஆகிய அனைவரும் பங்கு அளவில் அல்லது திருமண்டல அளவில் அல்லது மறைமாவட்ட அளவில் ஒரு வருடத்தில் ஒரு உருவாக்கத்திலாவது கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். **2)** ஒவ்வொரு பங்கும் மாதத்தில் ஒரு முறை வாரயிறுதி மலாய் மொழி திருப்பலி **பங்கு அளவில்** நடத்த கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**2. பங்கின் உத்தரவு: மறைக்கல்வி வகுப்புகள்**: புது நன்மை எடுத்த பிறகு அனைத்து குழந்தைகளும் பின்வரும் பணிக்குழுக்களில் ஏதேனும் ஒன்றை கண்டிப்பாக தேர்ந்தெடுக்க வேண்டும். அ) **பீடச்சிறுவர்கள்** (சிறுவர்கள்/ சிறுமியர்கள்) ஆ) **ஆங்கில பாடல்குழு** இ) **தமிழ் பாடல்குழு**. இது கட்டாயமானதாகும்.

**3. ஆசியா இளைஞர் தினம் 17:** ஜோக்ஜகர்த்தாவில் 30 ஜூலை- 9 ஆகஸ்ட் வரை ஆசியா இளைஞர் தினம் நடைபெற இருக்கிறது. ஆர்வமுள்ள இளைஞர்கள் மேல் விபரங்களை தெரிந்துக்கொள்ள தந்தை. சைமன் ஆனந்த் அவர்களை தொடர்புக்கொள்ளவும்.

**4. மதிய உணவு 2017 (சைவ & அசைவ உணவு வழங்கப்படும்): ஏற்பாட்டாளர்கள்:** அன்னை திரேசா வாசிப்பு மையம்.
**நாள்:** 30 ஏப்ரல் 2017, (ஞாயிறு) **நேரம்:** காலை 11.00 - 2.00 வரை **இடம்:** பங்கு மண்டபம், புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ. தயவு செய்து இந்த டிக்கெட்டுக்களை வாங்கி எங்கள் திட்டத்தை ஆதரிக்கவும். டிக்கெட் ஒன்றின் விலை ரிம 10/- மேலும் "ஏழைகளுக்கு அன்னதானம்" திட்டத்திற்கும் நீங்கள் டிக்கெட்டுகளை தானம் செய்யலாம். இவை ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.
**தொடர்புக்கு:** அன்னை திரேசா வாசிப்பு மைய அலுவலகம் (05-2410751)

**5. தவக்கால பிரச்சாரம் 2017 நிகழ்வுகள்:**
19/3/17 (3ஆவது வாரம்) - மக்களை சந்தித்து குறைந்தது 2 நபர்களுக்கு உதவுதல் - அதிச அளவில்
26/3/17 (4ஆவது வாரம்) - சொற்பொழிவு: "நம்பிக்கையை தக்க வைத்தல்" @ காலை 10.30~12.30 @ பங்கு மண்டபம்
2/4/17 (5ஆவது வாரம்) - இரத்த தானம் & உடல் உறுப்பு தானம்
9/4/17 (6ஆவது வாரம்) - உணவுப்பொருட்களை பகிர்ந்தளித்தல்

**6. ஆவிக்குள் அருள் வாழ்வு கருத்தரங்கு (ஆ):** ஈப்போ கார்டன், புனித சகாய மாதா தேவாலய கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி குழு 7 வாரம் ஆவிக்குள் அருள்வாழ்வு கருத்தரங்கை ஏற்பாடு செய்திருக்கின்றது. **நாள்: 17 ஏப் 2017** (திங்) **19 ஏப் ~31 மே 2017** (புதன்) இரவு 8.00~9.30 மற்றும் **3 ஜூன் 2017** (சனி) இரவு 9.00~11.30 வயது: 16 & அதற்கு மேல். அன்பு காணிக்கை: ரிம 30/- தொடர்புக்கு: கேனா லாவ் (016-3451188) அல்லது தாமஸ் ஜீ (012-5182818) பதிவு பாரங்களை பங்கு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். இறுதி நாள்: 7 ஏப் 2017

**7. மலேசியன் கத்தோலிக்க முகாம் மாணவர்கள் தினம் 2: நாள்:** 23 ~ 27 ஜூன் 2017 (வெள்~செவ்) **இடம்:** பினாங்கு தீவு **பதிவிற்கான இறுதி நாள்:** 31 மார்ச் 2017 (வெள்) **பதிவு கட்டணம்:** ரிம 150/- **தொடர்புக்கு:** பினாங்கு மறைமாவட்ட இளைஞர் கட்டமைப்பு (04-2274851)/ மின்னஞ்சல்: pdyn@pgdiocese.org

**8. தவக்கால ஒப்புரவு சடங்கு**

| | | |
|---|---|---|
| மார்ச் 20 (திங்) | இரவு 7.00 | புனித ஞானப்பிரகாசியார் ஆலயம், தைப்பிங் |
| மார்ச் 27 (திங்) | இரவு 8.00 | புனித மைக்கேல் ஆலயம், ஈப்போ |
| **மார்ச் 28 (செவ்)** | **இரவு 7.30** | **புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ** |
| மார்ச் 29 (திங்) | இரவு 8.00 | புனித சகாய மாதா தேவாலயம், ஈப்போ கார்டன் |
| ஏப் 5 (புதன்) | இரவு 7.30 | புனித பிதேசா ஆலயம், சித்தியாவான் |

**9. 24 மார்ச் 2017 கிறிஸ்மா திருப்பலியையொட்டி நேரலை:** கோத்தா பாரு, கிளாந்தான், புனித ஜெபமாலை பாத்திமா அன்னை ஆலயத்தில் காலை 8.00க்கு நேரலை செய்யப்படும். பினாங்கு ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும் கொண்டாட்டத்தை இணையத்தில் http://www.youtube.com/user/liveonlinepenang வழி காணலாம்.

**10. பழைய செய்திதாள்கள்:** கிறிஸ்து அரசர் சிற்றாலய செயற்குழு, புதிய சிற்றாலயம் கட்டுவதற்காக நிதி திரட்ட பழைய செய்தித் தாள்களை சேகரித்து விற்க திட்டமிட்டுள்ளது. கொடுக்க விருப்பமுள்ளவர்கள் அவைகளை கொண்டு வந்து பங்கு மண்டபத்தில் கொடுக்கலாம்.

**11. ஆலயத்தினுள் அடிப்படை உடையணிதலும், நல்லொழுக்கமும்:** நீங்கள் திருப்பலிக்கு வரும்போது உடையணிவதில் பெருமை கொள்ளுங்கள். நீங்கள் ஆண்டவருக்கு மிகச்சிறந்தவற்றை வழங்க வேண்டும். குட்டையான கால் சட்டைகளோ, கையில்லாத பனியன்களோ கூடாது. திருப்பலியின்போது கைப்பேசிகள் பயன்படுத்துவதை நிறுத்தவும். அப்படி அவசரமாக பேச வேண்டியிருந்தால் தயவு செய்து வெளியே செல்லவும், இதனால் மற்றவர்களால் செபிக்க இயலும். திருப்பலியின்போது மின்னியல் கருவிகளைப் பயன்படுத்த வேண்டாம். மருத்துவ தேவையைத் தவிர்த்து ஆலயத்தில் இனிப்புகளையோ, மெல்லும் கோந்தையோ உட்கொள்ளாதீர்கள். இது புனிதமான ஆலயம் என்ற உங்களின் உணர்வை இழக்காதீர்கள். பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் மேற்படி நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவதை உறுதிசெய்யுங்கள்.

**12. எரிக்கப்பட்ட உடலின் சாம்பல் பகுதிகள்:** எரிக்கப்பட்ட எல்லா எஞ்சிய உடல் பகுதிகளும் ஆற்றில், கடலில் கரைக்க, குடும்ப உறுப்பினர்களிடையே பிரித்துக்கொள்ளவோ, உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளவோ, அவர்களின் எலும்புகளை ஆபரணங்களாக செய்துக்கொள்ளவோ **அனுமதிக்கப்படாது**. இது கத்தோலிக்க விசுவாசத்திற்கு இணக்கமற்ற எதிரான செயலாகும்; **கத்தோலிக்க நடைமுறையும் அல்ல.** உடல்பகுதிகள் இறந்தோர் சாம்பலை வைக்க சுவற்றில் உள்ள அமைவுகளில் (Columbarium) **வைக்கவேண்டும்,** அல்லது கல்லறையில் புதைக்க வேண்டும் (உங்கள் தோட்டத்தில் அல்ல). இது உடலின் உயிர்ப்பை விசுவாசிக்கும் நோக்கமாகும். அப்படி ஒரு வேளை விசுவாசத்திற்கு எதிரான செயல்கள் இருந்தால், அடக்க சடங்குகள் மறுக்கப்படும்.

**13. விசுவாசத்தைக் கைவிடுதல்:** பிற கிறிஸ்துவ சபைகளில் அல்லது பிற மதத்தில் சேருவதற்காக கத்தோலிக்க திருச்சபையை விட்டு விலகியவர்கள் உங்களின் செய்கையினால் கத்தோலிக்க உரிமைகளை இழக்கின்றீர்கள்.

**14. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி பிப்ரவரி 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **224,069.38** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **245,107.11** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும், வாரந்தோறும் அல்ல)

**12/03/17 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,006.25 **காலை 9.00** - RM 1,715.75 **தாசேக்**– RM 95.45 **மொத்தம்**– RM 2,817.45
**2017** - RM 240.00 **ஏழைகளுக்கு**- RM 2,729.25 **கெபி**- RM 444.40
நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்